1979 பிப்ரவரி 14]

சென்னை நகரில் குப்பைகளை அகற்ற புதிய யந்திர சாதனங்கள்

* வினா எண் 46—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் குப்பைக் கூளங்களையும், கழிவுகளையும் அப்புறப்படுத்துவதற்கென மாநகராட்சி புதிய முறை இயந்திர சாதனங்கள் வாங்க நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) என்ன விலையில் வாங்கப்பட உள்ளது?

(இ) தற்போது இந்த வேலைக்கென எத்தனை லாரிகள் இயங்கி வருகின்றன?

(ஈ) பழுதுபட்டு உள்ளவை, உபயோகிக்க முடியாதவை முறையே எத்தனை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) சோதனைக்காக ஒரு டிராக்டர் ட்ரெயிலர் மட்டும் ரூ. 25,390-24 விலையில் வாங்கப்பட்டு உள்ளது. மற்ற சாதனங்கள் வாங்குவது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

(இ) 129,

(ஈ) பழுதுபட்டு உள்ளவை 33. உபயோகிக்க முடியாதவை ஒன்றுமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, சென்னை நகரில் அதிகமாக குப்பைக் கூளங்கள் சேர்கிறது. ஆகவே அவைகளைச் சேகரித்து அள்ளிச் செல்வதற்கு எங்கே வாங்கப்பட்டது அந்தச் சாதனம் என்பதை அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப்பிறகு அவைகளை எங்கே ரிப்பேர் செய்கிறார்கள், ரிப்பேர் செய்வதற்கான இடங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வாங்கப்பட்ட சாதனம் எங்கே ரிப்பேர் செய்யப்படுகிறது என்கின்ற தகவல் இல்லை. ஆனால் அவை தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, புதைசாக்கடை இல்லாத நகரப்பகுதிகளிலே வேலை செய்கின்ற நகரசுத்தித் தொழிலாளர்கள் மலத்தை தலையிலே தூக்கிக்கொண்டு போகின்ற அவல நிலை இருக்கிறதே. அப்படிப்பட்ட நிலையை மாற்ற நவீன வசதிகள் அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்புடைய கேள்வி அல்ல. ஆகவே தனிக்கேள்வி போட்டு அதற்கான விவரம் பெற வேண்டுகிறேன்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, சென்னை நகரில் ஓடத் தகுதி இல்லாத லாரிகள் ஏராளமாக ஓடிக் கொண்டிருப்பதனால் நகரசபைக்கு இது அதிகமாக செலவை ஏற்படுத்துகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதே நேரத்தில் 1972-லேயிருந்து 1978-க்குள் எவ்வளவு புதிய லாரிகள் வாங்கப் பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஓடத் தகுதி இல்லாத எதுவும் ஓடுவதாகத் தெரியவில்லை. தகுதி உள்ளவைத்தான் ஓடமுடியும். புதிதாக வாங்கப்பட்டது ஒன்றே ஒன்றுதான். அதுவும் சோதனைக்காக வாங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரில் உள்ள சினிமா ஸ்டுடியோக்கள்

* வினா எண் 47—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் தற்போது எத்தனை சினிமா ஸ்டுடியோக்கள் இயங்குகின்றன?

(ஆ) அவற்றிற்கு எந்த அடிப்படையில் மாநகராட்சி லைசென்சுக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பன்னிரெண்டு.

(ஆ) உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் எல்லா ஸ்டுடியோக்களுக்கும் ஒரே அளவில்தான் உரிமைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே .. .. ..

(திரு. மு. அரங்கநாதன் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நான் சொல்வது எனக்காக அல்ல. இந்த அவையின் மரபைக் காப்பாற்றுங்கள். உட்காருங்கள். எழுந்து நிற்கக்கூடாது.

திரு. மு. அரங்கநாதன் : எழுந்து நிற்கக்கூடாது என்று சர்வாதிகாரிமாதிரி உத்தரவுப் போடக்கூடாது. உங்களுக்கு அந்த உரிமை கிடையாது. எழுந்து நிற்கக்கூடாது என்று நீங்கள் சொல்லமுடியாது. தவறு செய்தால் திருத்த வேண்டும், அதுதான் சபாநாயகர் வேலை.